

# திரித்துவம்

டக் பேச்சுலர்

Copyright © 2009, 2020
by Doug Batchelor

All rights reserved.
Printed in India.

Published by:
**Amazing Facts India**
Post Box No 51
Banjara Hills, Hyderabad
Telangana, 500034

www.AmazingFactsIndia.org

# திரித்துவம்

## வேதாகமத்தை சார்ந்ததுதானா?

எழுதியவர் டக்பேச்சுலர்

1 மிக உயர்ந்த தலைப்பு : .................................... 2

2 ஒரு பெரிய சிக்கல் ................................................ 5

3 இயேசு மட்டுமா? .................................................... 7

4 இயேசு முழுமையாகவே தேவனா? ................... 10

5 அவருடைய விரோதிகள் அறிந்திருந்தனர். ....... 15

6 மத்தியக் காலத்திற்குரிய பிழையா? ................. 17

7 ஒரு தேவன் மூன்று நபர்கள் .............................. 19

8 ஒருமைப்பாடா அல்லது அளவிடுதலா? ........... 23

9 இயற்கையில் தேவன் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார் .............................. 25

10 தவறான புரிதலின் மூலக்காரணம். ..................... 28

11 யார் யாரை முந்துகிறார்? .................................. 30

12 நண்பரா அல்லது சக்தியா? .............................. 31

13 கல்வாரியில் அன்பு ............................................. 37

14 திரித்துவத்தின் ஓர் பிரிவு .................................. 38

15 முடிவுரை ............................................................ 39

**ஒரு ஆச்சரியமான உண்மை :** *ஒளி என்பது மூன்று வித முதன்மைக் கதிர்கள் அல்லது ஒளிக்கற்றைகளைக் கொண்டது என அறிவியல் கூறுகிறது. அவை தனித்தன்மைப் பெற்றிருந்தாலும் மற்றதைச் சாராமல் ஒன்று மட்டும் தனியாக ஒளியாகிவிட முடியாது. ஒவ்வொரு ஒளிக்கதிரும் தனித்தனி வேளையை செய்கிறது. முதலாவது உருவாகிறது, இரண்டாவது ஒளிர்கிறது, மூன்றாவது பூர்த்தி செய்கிறது. முதல் கதிர் காணப்படமுடியாத ஒளி, அதை பார்க்கவும் முடியாது உணரவும் முடியாது. இரண்டாவது பாக்கவும் முடியும் உணரவும் முடியும். மூன்றாவது பார்க்க முடியாது ஆனால் அதன் வெப்பத்தை உணர முடியும்.*

*ஒளியைப்போல, நம்முடைய "ஒரே தேவன்" மூன்று தனித்துவம் வாய்ந்த நபர்களாக, பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என வெளிப்படுத்தப்படுகிறது. "பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்." (1 யோவான் 5:7)*

---

# 1 மிக உயர்ந்த தலைப்பு :

கிறிஸ்தவர்கள் மத்தியில் பேசப்படும் கோட்பாடுகளில் விவாதிக்கப்படும் ஒரு சில தலைப்புகளில் அதிக உணர்ச்சிகரமாக பேசப்படும் பொருள் திரித்துவம் பற்றிய ஆராய்ச்சிதான். இறைத்தன்மைகளைக் குறித்து எழும்பிய

சர்ச்சைகளில் சபைகள் பிரிந்திருக்கின்றன, மற்றும் சண்டை சச்சரவுகள் நடந்திருக்கின்றன.

தேவனை குறித்த குழப்பங்கள் புதிதல்ல. சிருஷ்டிப்பின் காலத்திலிருந்து தேவனைப்பற்றி புரிந்து கொள்ளவும் விவரிக்கவும் மனிதன் உண்மையாக முற்ப்பட்டுள்ளார். யோபுவின் புத்தகத்தில் ஒவ்வொரு மனித இதயத்தின் ஆவலை சோப்பார் இவ்வாறு விவரிக்கின்றார். “தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வவல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ? அது வானபரியந்தம் உயர்ந்தது; உம்மால் என்ன ஆகும்?” அது பாதாளத்திலும் ஆழமானது, நீர் அறியக்கூடியது என்ன?” (யோபு 11:7, 8).

ஜான் வெஸ்லி இவ்வாறு சொல்கிறார், “ஒரு மனிதனை புரிந்து கொள்ளக்கூடிய ஒரு புழுவை என்னிடம் கொண்டு வாருங்கள், அப்பொழுது திரியேக தேவனைப் புரிந்துக்கொள்ளும் மனிதனை நான் காட்டுகிறேன்.”

மறுத்து பேசுவதற்கிடமில்லாமல், தேவனைப் பற்றிய ஆராய்ச்சி - எந்த மனிதனும் அணுகுவதற்கோ அல்லது சிந்திபதற்கோ முற்படும் உயர்ந்த தலைப்பாக இருக்கிறது. தேவன் தம்மை நித்திய வல்லமை, சர்வ வல்லமை உள்ளவர் என்றும், எல்லாவற்றையும் அறிந்தவர் எனவும் வரையறைப்படுத்துகிறபடியால், இதைக்குறித்த ஆராய்ச்சி, மற்ற எதைக்காட்டிலும் ஆழமானதாகவும், பரந்ததாகவும் விரிக்கவும் இருக்கிறது.

“பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.” (ஏசாயா 55:9). எப்படி நம்முடைய பலவீனமான கால்களால் குதித்து வானத்து நட்சதிரங்களை தொடமுடியாதோ, அப்படியே வரையறுக்கப்பட்ட மனிதனின் மனம் நித்திய தேவனைக் குறித்து முழுமையாக புரிந்துக்கொள்ள முடியாது. எனவே நம்மை நாமே தாழ்த்தி, பரிசுத்தப்படுத்தி முழங்காலில் நின்று அதிகமாக ஜெபத்தோடே தேவனைப் பற்றி அவருடைய ஆள் தத்துவத்தின் மர்மங்களைப் பற்றி புரிந்து கொள்ள நாம் அணுக வேண்டியது அவசியமாகிறது. மோசேயைப் போல தேவனுடைய சந்நிதிக்கு வரும்போது நமது கால்களில் இருக்கின்ற பாதரட்சைகளைக் கழற்றிப் போட வேண்டும், ஏனென்றால் “...நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி...” (யாத்திராகமம் 3:5). நம்முடைய மனதில் முன்கூட்டியே பெற்றிருக்கும் கருத்துக்கள், அபிப்பிராயங்கள், மற்றும் நம் குழுவில் பெற்ற பயிற்சி நடைமுறைகள் எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு தேவனுடைய வார்த்தையை நேரடியாகப் படித்து தேவன் தம்மைக் குறித்து என்ன வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதை படித்து கொள்ள வேண்டும், ஆனாலும் ஒன்றை ஞாபகத்தில் கொள்ளவேண்டும், தேவனைக் குறித்து தேவன் தாமே முழுமையாக புரிந்து

கொள்ள முடியும்; அதனால் எவ்வளவுதான் உண்மையுடன் ஆராய்ந்தாலும் இன்னமும் சில பதில் கிடைக்காத கேள்விகள் இருக்கலாம்; அதைப்பற்றி நித்தியத்திற்கும் படித்தலே பெரிய பலன் கொடுக்கும் ஒரு ஆய்வாக இருக்கும்.

## 2 ஒரு பெரிய சிக்கல்

“கொஞ்சம் பொறுங்கள்” யாரோ ஒருவர் சொல்கிறார், “வேதாகமம் ஒரே ஒரு தேவன் தான் உண்டு என்று போதிப்பதால் எப்படி தேவன் மூன்று நபர்களைக் கொண்டவராக இருக்க முடியும்?” சந்தேகத்துக்கு இடமில்லால் வேதாகமம் ஒரே ஒரு தேவன்தான் உண்டு என்று கூறுகிறது. 3,000 ஆண்டுகளுக்கு மேலாக யூதர்கள் உபாகமம் 6:4 வசனத்தை திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், “இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். “இந்த புனிதனமான பகுதி ஷெமா என்றழைக்கப்படுகிறது (எபிரெய முதல் வார்த்தையின் அடிப்படையில் அழைக்கப்படுகிறது.) மற்றும் அதனை உயர்வான ஸ்தானத்தில் வைத்து நூற்றுக்கணக்காண வருடங்களாக பக்தியுள்ள யூதர்களால் மனப்பாடம் செய்யப்பட்டு வருகிறது.

ஏசாயா தேவனைப்பற்றிய சாட்சியினை பதிவிடுகிறார், “நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே; என்னைத்தவிர தேவன் இல்லையென்று; இஸ்ரவேலின் ராஜாவாகிய

கர்த்தரும், சேனைகளின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார்,...என்னைத்தவிர தேவனுண்டோ? வேறொரு கன்மலையும் இல்லையே; ஒருவனையும் அறியேன்" (ஏசாயா 44:6,8). இயேசுவும் "ஒன்றான மெய்த்தேவனை" பற்றி (யோவான் 17:3) சொல்லிக்கொடுத்தார், மற்றும் பவுலும் எழுதியது, "தேவன் ஒருவரே.." (1 தீமோத்தேயு 2:5).

பெரும்பாலான விசுவாசிகள் இந்த மூல சத்தியத்தை ஏற்றுக்கொண்டாலும், சபை சரித்திரத்தில் இதனுடைய தாக்கங்களைக் குறித்து சூடான வாக்குவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. அப்படியென்றால் ஒரு நபருக்கு மூன்று வித்தியாசமான நாமங்கள் உள்ளன என்று அர்த்தமாகுமா? அல்லது மூன்று தனிநபர்கள் மர்மமான வடிவமெடுத்து ஒருவராக இருக்க முடியுமா? இயேசு ஒரு நல்ல நபராக, நம்மை மீட்க மட்டும் படைக்கப்பட்டவரா மற்றும் பிதா மட்டுமே தேவனா? வேறு சிலர் பிதாவும் குமாரனும் தேவன் தாம் ஆனால் பரிசுத்த ஆவி தனித்துவம் இல்லாத ஒரு சக்தியாகவும் அவர்கள் சொல்லுவதை செய்கிற ஒன்றாகவும் கருதுகிறார்கள். இந்த ஒவ்வொரு முரண்பாடான கருத்துக்கும் உண்மையாக பின்பற்றுகிறவர்கள் இருக்கதான் செய்கிறார்கள். இந்த கருத்துகளின் மூலத்தை ஆராய்ந்து வேதாகமத்தோடு ஒப்பிட்டு பார்ப்போம்.

# 3 இயேசு மட்டுமா?

மூன்றாம் நூற்றாண்டில் ரோமாபுரியில் வாழ்ந்த லிபியன் பாதிரி சபேலியஸ் என்பவர், தேவன் ஒருவரே ஆனால் வெவ்வேறு நாமங்கள் உடையவர் என போதித்தார்-இது வரைமுறைபடுத்துதல் என அழைக்கப்படுகிறது. இவ்வாறு பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்பது அவ்வப் பொழுது தேவைக்கேற்ப தேவன் மனிதனோடு தொடர்பு கொள்வதற்கு தேவன் அணிந்து கொள்ளும் பலவிதமான கிரீடங்கள் அல்லது பெயர்களை பிரதிபலிக்கிறது. அது தண்ணீர் போன்றது; தண்ணீர் திடப்பொருளாகவும், திரவமாகவும், ஆவியாகவும் மாறக்கூடியது.

எனினும், அவைகள் ஒருவரால் நடத்தப்படும் மூன்று பாத்திரங்கள் அல்ல. சபேலியஸின் கருத்துகள் வேதாகம போதனைக்கு மாறாக இருந்ததால் அவர் உடனே சபையை விட்டு நீக்கப்பட்டார். ஆனால் இன்னமும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் பொதுவாக அறியப்பட்டிருக்கும் “ஒருமை” அல்லது “இயேசு மட்டும்” என்ற கோட்பாட்டுடன், இன்றும் இருக்கிறார்கள். “இயேசு மட்டும்” போதனை இயேசு கிறிஸ்து குமாரன் மட்டுமல்ல, பிதாவாகவும் பரிசுத்த ஆவியாகவும் இருக்கிறார் என்று உரிமை கோருகிறது. இந்த நம்பிக்கைக்கு வேதாகம ஆதாரமாக ஏசாயா 9:6ல் சொல்லப்பட்டிருக்கும் மேசியா (வாக்குதத்தும்

செய்யப்பட்ட குமாரன்) "நித்திய பிதா" என்றழைக்கப்படுவது சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆவிக்குரிய இருளில் மூழ்கியிருக்கும் இந்த உலகத்திற்கு பிதாவாகிய தேவனுடைய உண்மையான குணாதியசங்களை தெளிவாக்கவே குமாரன் பூமிக்கு வந்தார் என்கின்ற உண்மையை இந்த "ஒருமை" கோட்பாடு கவனிக்காமலே போகிறது. கெத்சமனே தோட்டத்தில் இயேசு தன் பிதாவை நோக்கி ஜெபித்தார், "பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும். நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்...." (யோவான் 17:5,6). இயேசு ஒருவர் மட்டுமே பிதாவை வெளிப்படுத்த முடியும்; ஏனென்றால் இயேசுவே பிதாவின் பிரதி பிம்பம். (லூக்கா 10:22; எபிரேயர் 1:3)

சீஷர்கள் கிறிஸ்துவிடம் பிதா எப்படி இருப்பார் என்று கேட்டதற்கு அவர் சொன்னது, "..என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்..."(யோவான் 14:9). இயேசு பிதாவின் குணாதிசயத்தை பிரதி பிம்பமாக எடுத்துக்காட்டி பிதாவை பிரதிபலித்த காரணத்தினால் அவருக்கு "நித்திய பிதா" என்கிற பெயருண்டு. இயேசு நித்திய பிதா என்றழைக்கப்படுவதற்கு இன்னொரு காரணம், இந்த உலகமும், அதில் காணப்படும் அனைத்தும் கிறிஸ்துவின் மூலமாகவே உருவாக்கப்பட்டது. ஆதலால் சரியான ஞானத்தின்

வாயிலாக இயேசுவே நமது பிதாவாகிறார். (எபிரேயர் 1:2; யோவான் 1:3 )

வேதாகமத்தில் ஏசாயா 9:6 - ல் மட்டுமே இயேசு பிதா என்றழைக்கப்படுகிறார். இயேசு தம்மை தாமே மனுஷகுமாரன், நம்முடைய சகோதரன், நம்முடைய மேய்ப்பன், நம்முடைய சிநேகிதன் மற்றும் நம்முடைய ஆசாரியன் என்று சொல்கிறார் என்பதை நாம் மனதில் வைக்க வேண்டும். ஒரு வசனத்தின் வாயிலாக கோட்பாடுகளை வகுத்துக் கொள்வது என்பது ஒரு வேலிக்கல்லின் மீது கட்டப்படும் வீட்டிற்கு சமமான மதியீனமாகும். வேதாகமம் பிதாவையும், குமாரனையும் வெவ்வேறான தனி உடல் பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்று கூறுகிறது. கிறிஸ்து பூமியில் இருந்த போது, அவர் பரலோகத்திலிருக்கிற என் பிதாவைக் சுட்டிக்காட்டுகிறார். "... பரலோகத்திலிருக்கிற என் பிதா..." (மத்தேயு 10:32). அவர் எப்பொழுதும் அவருடைய ஜெபங்களை பரலோகத்துக்கு நேராக பிதாவிடம் ஏறெடுத்து பிதா அவரடைய சொந்த சித்தம் கொண்டிருந்ததை வெளிப்படுத்துகிறார் "பிதாவே, உமக்கு சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது..." (லூக்கா 22:42). "பிதாவே, உம்முடையக் கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்..." (லூக்கா 23:46). அவர் மரித்து உயிர்த்தெழுந்த பிறகு அவர் எழுந்தருளி "தேவனுடைய வலது பாரிசத்துக்கு"

சென்றார். (ரோமர் 8:34). இது பிதாவுக்கு தனி இடம் இருக்கிறது என்பதை காட்டுகிறது.

உண்மையில், இயேசுவே தான் பிதா அல்ல என்று 80 முறைக்கு மேலாக சொல்லியிருக்கிறார். ஒரே நோக்கத்துடன் ஒரே செயல்பாட்டுடன் இருக்கும் இயேசுவும் பிதாவும் தனித்தனி ஆள் தத்துவமுடையவர்கள் என்பது தெளிவு. மேலும், ஒரு சம்பவத்துக்கும் மேலான தருணங்களில் பிதா இயேசுவுடன் பேசினார். “அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, “ இவர் என்னுடைய நேசக்குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்...”(மத்தேயு 3:17). முதலாவது இயேசுவும் பிதாவும் இரண்டு, தனித்தனி நபர்கள் அல்லது இயேசு வேறொரு இடத்திலிருந்து குரல் வருவது போல பேசுவதில் வல்லவராயிருக்க வேண்டும்.

# 4 இயேசு முழுமையாகவே தேவனா?

இயேசு உண்மையில் நித்திய தேவனுடைய எல்லா குணாதிசயங்களையும் பெற்றுள்ளாரா என மற்றொரு குழுவினர் கேள்வி எழுப்புகின்றனர். 4 - ம் நூற்றாண்டின் அலெக்ஸாண்ட்ரிய பாதிரியார் ஏரியஸ் என்பவர் தேவனைக் குறித்து வேறுவிதமாக எண்ணியவர், அவர் வழி வந்தவர்கள் தாம் இவர்கள். தேவன் வேறு எதையும் சிருஷ்டிக்கும் முன்பதாக, பிதாவிற்கு சமமில்லாதவராக இணை நித்தியமில்லாதவராகவோ இருக்கின்ற

ஒரு குமாரனை உருவாக்கினார் என்று அவர் போதித்தார். ஏரியனிசம் என்று சொல்லப்படும் இந்தக் கருத்தும்படி இயேசு கிறிஸ்து இயற்கைக்கு அப்பாற்பட்ட சிருஷ்டிப்பு, ஆனால் முழுமையாக அவர் மனுஷத்தன்மையோ தெய்வீகத்தன்மையோ பெற்றவரல்ல என்பதே. இன்னும் சிலர் இந்த கோட்பாட்டின் முதிர்ச்சியற்ற கருத்தினை தழுவுகிறார்கள்; பிதாவாகிய தேவன் பரிசுத்த ஆவியுடன் பிரபஞ்சம் சம்பந்தப்பட்ட நெருங்கிய உறவு கொண்டதால் இயேசு பிறந்தார் என்கின்றனர். அவர்கள் கூறும் காரணம், “வேறு எப்படி அவரை குமாரன் என்றழைக்க முடியும்?”

இயேசு மூலமாகவே சகலமும் உணடாயிற்று என்றும், அவர் சிருஷ்டிக்கப்பட்டவர் அல்ல என்றும் (யோவான் 1:1-4) புதிய ஏற்பாட்டு போதனை சொல்வதால் இவர்களுடைய கொள்கை முற்றிலும் மாறுபாடாக இருக்கிறது. தேவனுக்கான வேதாகம விளக்கங்களையும், இயேசுவைப்பற்றி வேதாகமம் குறிப்பிடபட்டிருக்கிறதையும் ஒப்பிட்டு பார்க்கும் போது யொகோவாவின் குணாதிசயங்கள் இயேசுவுக்கும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. சக்தி வாய்ந்த இந்த உதாரணங்களை கவனியுங்கள் : அவர் தானாய் உண்டானவர் (யோவான் 1:1-4; 14:6;) தேவன் மட்டுமே தானாயுண்டானவர் (சங்கீதம் 90:2).

♦ இயேசு தாமே நித்தியமானவர் என வகையறுக்கிறார். “இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்:

நான் அல்பாவும், ஒமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்..." (வெளி 1:8)

- ♦ அவரே நித்திய ஜீவன், நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறார். (1 யோவான் 5:11,12,20)
- ♦ அவர் சர்வ வல்லமையுள்ளவர். (வெளி 1:8) அவர் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் (யோவான் 1:3) "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்." (அதியாகமம் 1:1). "ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களினாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது." (கொலோசெயர் 1:16).
- ♦ பிதாவே இயேசுவை தேவன் என்றழைக்கிறார். "குமாரனை நோக்கி; தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்ஜியத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது." (எபிரெயர் 1:8 சங்கீதம் 45:6).
- ♦ இயேசு பாவத்தை மன்னிக்க முடியும் (லூக்கா 5:20,21) ; தேவன் மட்டுமே பாவத்தை

மன்னிக்க முடியும் என வேதாகமம் சொல்கிறது. (ஏசாயா 43:25).

- ♦ பத்து கட்டளைகளில் தொழுகை சர்வவல்லவருக்கு மட்டுமே என்று சொல்லப்பட்டிருப்பதற்கு இணங்க இயேசு தொழுகையை ஏற்றுக்கொண்டார். (மத்தேயு 14:33) "அவர்கள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப் போகிறபோது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார். அவர்கள் கிட்ட வந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்து கொண்டார்கள்" (மத்தேயு 28:9). உயிர்த்தெழுந்த இரட்சகரைப் பார்த்த, சந்தேகம் தீர்ந்த தோமா, ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தான், "என் ஆண்டவரே! என் தேவனே!" (யோவான் 20:26-29).
- ♦ தேவ தூதர்களும் இயேசுவை வணங்குகின்றனர். "மேலும், தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்க செய்தபோது: தேவதூதர் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக்கடவர்கள்." (எபிரேயர் 1:6)
- ♦ தேவன் மட்டுமே மனிதனுடைய இருதயத்தின் நினைவுகளை அறிவார் என வேத வசனங்கள் சொல்கின்றன. (1 இராஜாக்கள் 8:39). இயேசுவும் தொடர்ந்து மனுஷருடைய உள்ளத்தில் இருப்பதை அறிந்தார், "மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால்..." (யோவான் 2:25).

"அதற்கு நாத்தான்வேல்: நீர் என்னை எப்படி அறிவீர் என்றான், இயேசு அவனை நோக்கி, பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன் என்றார்." (யோவான் 1:48).

- ஆவி வாயிலாக, இயேசு எங்குமிருப்பவர். "...இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்." (மத்தேயு 28:20). "நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை: இந்தப்பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்." (அப்போஸ்தலர் 18:10).
- அவருக்கு ஜீவனைக் கொடுக்க வல்லமை உண்டு மற்றும் அவர்தாமே உயிர்த்தெழுந்தார். "ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளமாட்டான்; நானே அதைக்கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு." (யோவான் 10:18). "... நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்." (யோவான் 11:25).

எனவே தேவன் என்பதற்கான முதன்மை வரையறையை கவனிக்கும்போதும் மற்றும் இந்த எல்லா வரையறையும் இயேசுவுக்கு

பொருந்துகிறபடியாலும் இயேசுவே தேவனாக இருக்க முடியும் என்பது தெளிவாகிறது.

## 5 அவருடைய விரோதிகள் அறிந்திருந்தனர்.

இயேசுவின் எதிரிகளும் புரிந்து கொண்டு, இயேசு பிதாவாகிய தேவனோடு தம்மை சமமாக உரிமை கோரியதை ஏற்றுக்கொண்டனர். "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்று இயேசு தைரியமாக அறிவித்த போது யூத தலைவர்கள் அவர்மீது கோபம் கொண்டு அவரைப் பிடிக்க வகை தேடினார்கள். இயேசு தம்மை தேவன் என உரிமை கோரியதை அவர்கள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் புரிந்து கொண்டார்கள். "யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை: நீ மனுஷனாயிருக்க, உன்னைத் தேவன் என்று சொல்லி, இவ்விதமாகத் தேவதூஷணஞ்சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்கள்." (யோவான் 10:30, 33).

எரிகின்ற முட்செடியின் வாயிலாக தன்னிருப்பான யேகோவாதான் தான் என்று கிறிஸ்து கூறின போது யூதர்கள் அவர்மேல் கல்லெறிய முற்பட்டார்கள். இயேசு அவர்களிடம் சொன்னது, "... ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது அவர்மேல்

எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசு மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப்போனார்.(யோவான் 8:58, 59).

இயேசு தேவனோடு தம்மை சமமாக உரிமை கோரியதை யூதர்கள் புரிந்து கொண்டனர். "என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்து வருகிறார், நானும் கிரியைசெய்து வருகிறேன் என்றார். தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ்சொல்லித் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள்." (யோவான் 5:17, 18).

இந்த வசனங்களையெல்லாம் வாசிக்கும் பொழுது மூன்று முடிவுகளை மட்டுமே நாம் பெற முடியும். முதலாவது, அவர் இப்படிப்பட்ட கோபப்படுத்தும் உரிமையெடுத்துக்கொண்ட போது அவர் மனநிலை பாதிக்கப்பட்டவராக இருந்திருக்க வேண்டும். இரண்டாவதாக அவர் ஒரு பொய் சொல்கிறவராக இருக்க வேண்டும். இந்த இரண்டும் ஏற்றுக்கொள்ள முடியாத முடிவுகள். மூன்றாவது சாத்தியமான முடிவு அவர் உன்னதமான ஒரு சத்தியத்தைப் பேசியிருக்கிறார். கிறிஸ்து பதிலாளியாக சிலுவையில் மரித்தார் என்பதை ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்தவர்களுக்கு இந்த மூன்றாம் தெரிவு நிரூபிக்கக் கூடிய ஒன்று, இல்லையென்றால் ஒரு பொய் பேசுபவரோ, மனநிலை பாதிக்கப்பட்டவரோ நம்முடைய இரட்சகராக இருக்க போதுமான நீதியுள்ளவராக இருக்க முடியாது.

# 6 மத்தியக் காலத்திற்குரிய பிழையா?

அநேகமாக தேவனைப்பற்றி அதிகமாக பேசப்படும் கிறிஸ்தவப் பார்வை “திரித்துவம்“ எனப்படுவது. இந்த பிரசித்திப் பெற்ற நம்பிக்கை போதிப்பது: தேவத்துவம் என்பது நித்தியம் நித்தியமாக கடந்த காலத்திலிருந்து ஒன்றாய் வாழ்ந்து கொண்டிருக்கும் மூன்று தனித்தன்மை வாய்ந்த நபர்களைக் கொண்டது; அவர்கள் பிதா, குமாரன் (இயேசு கிறிஸ்து), பரிசுத்த ஆவி என பெயரிடப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொருவரும் அசல் தன்மையான, மற்றவர்களிடமிருந்து பெறப்படாத, வேறொருவரிடமிருந்து கடன் பெறாத ஜீவனைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் யாவரும் சமமான தேவனாயிருக்கிறார்கள் மற்றும் தன்மையிலும், குணாதிசயத்திலும், நோக்கத்திலும் ஒன்றாயிருக்கிறார்கள். அவர்கள் மூன்று “தேவர்கள்” அல்ல, ஆனால் தனித்தன்மை வாய்ந்த மூன்று நபர்களின் கூட்டான ஒரே தேவன்.

மத்தியக் கால ஏறுமாறான சபையே இதனை முதலில் அறிமுகப்படுத்திய குற்றவாளி என்று சொல்லி அவர்கள் திரித்துவவாதம் மதத்துக்கு எதிரானது என தாக்குகுகின்றனர். உண்மையில், கத்தோலிக்கப் பதிப்பாகிய திரித்துவத்துக்கு எதிராக 19 - ம் நூற்றாண்டிலிருந்து புரோட்டஸ்டன்ட் தலைவர்களில் பலர் திரியேக தேவனை குறிப்பிட

வேதாகம வார்த்தையாகிய “கர்த்தத்துவம்” என்ற பதத்தை பயன்படுத்தினர்.

எப்படியாயினும், விசுவாசக்கேடான சபை ஒன்று திரித்துவம் அல்லது வேறு எந்த கொள்கையையாகிலும் நம்புகிறது என்பதால் தானாகவே அவை வேதாகமத்தைச் சார்ந்தது அல்ல என கொள்ளலாகாது. இதற்கு மாறானதும் உண்மையே. பழங்கால சபைத் தலைவர்கள் ஏற்படுத்தியதால் அந்த நிலைப்பாடு சரியானது என கூற முடியாது. அப்போஸ்தலரும் கூட இயேசுவின் முதல் வருகையைக்குறித்து தவறாக புரிந்து கொண்டார்கள். கோட்பாட்டின் உண்மைத்தன்மை வேதாகமத்தின் அடிப்படையில் தான் அமைய வேண்டுமே தவிர யார் அதை ஏற்றுக்கொள்கிறார்கள் அல்லது மறுக்கிறார்கள் என்பதை பொருத்தல்ல.

கிறிஸ்தவ சபை ஏற்படுமுன் வெகுகாலம் முன்பாகவே பழைய ஏற்பாடு புத்தகம் எழுதப்பட்டது, தவறோ அல்லது உண்மையோ தேவத்துவம் முன்று நபர்களைக் கொண்டது என அது போதிக்கிறது. ஏசாயாவில், புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டும் மீட்பர், அறிவிப்பது, “கர்த்தராகிய ஆண்டவரும், அவருடைய ஆவியும்” அவரை மீட்பின் பணிக்கு அனுப்பக் காரணர்களாயிருந்தார்கள். (கலாத்தியர் 4:4, 5) (ஏசாயா 48:16).

திரித்துவம் என்கின்ற வார்த்தை (இலத்தின் பாஷையின் வார்த்தை திருனிடாஸ் அதாவது மும்மை என பொருள்படும்) வேதாகமத்தில் காணப்படவில்லை என்பதால் திரியேக தேவன் என்பது சரியாயிருக்க

முடியாது என சிலர் நினைக்கிறார்கள். ஆயினும், ஆங்கிலத்தில் ஆயிர வருஷத்துக்கு மில்லேனியம் என்று சொல்லுவார்கள். அந்த மில்லேனியம் என்கிற வார்த்தை ஆங்கில வேதாகமத்தில் வெளியாகமம் 20 - ம் அதிகாரத்தில் கொடுக்கப்படவில்லை, மாறாக ஆயிரம் வருஷம் என்றிருக்கும். இயேசுவின் இரண்டாம் வருகைக்கு பின் வரக்கூடிய 1000 வருஷ இளைப்பாறுதலை குறிக்க சொல்லப்படுவதாகும். வேதாகம சத்தியத்தை விளக்குவதற்கு சற்றே வித்தியாசமான வார்த்தையை பயன்படுத்துவதால் அந்த சத்தியம் எந்தவிதத்திலும் குறைவுள்ள சத்தியமாகாது. இது திரித்துவம், இரண்டாம் வருகை, நுட்ப நியாய விசாரணை, மற்றும் அநேக மற்ற கோட்பாடுகளுக்கான சொற்றொடர்களுக்குப் பொருந்தும்.

# 7 ஒரு தேவன் மூன்று நபர்கள்

தேவனின் பெயர்கள் அவரின் இயல்பான தன்மையின் பண்புக்கூறுகளை வெளிப்படுத்துகின்றன. ஒரு மனிதனின் குணத்தை குறிக்கும் பல்வேறு பெயர்களை சூட்டுவது தேவனின் நெடிய நிலைநாட்டப்பட்ட இயல்பு. யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவிடமிருந்து தன் தகப்பனின் அசீர்வாதத்தை ஏமாற்றி பெற்றுக் கொண்ட காரணத்தால் அவன் “எத்தன்“ என்கிற பெயரைப் பெற்றான். (ஆதியாகமம் 27:35, 36) மனம் மாறிய பிறகு யாக்கோபு தேவ தூதரோடு போராடி

ஆசீர்வாதத்தை பெற விழைத்தான். ஆப்பொழுது அவனுடைய பெயர் "இஸ்ரவேல்" என மாற்றப்பட்டது, அதன் அர்த்தம் "தேவனோடிருக்கும் இளவரசன்" (ஆதியாகமம் 32:26-28).

அதே போல, ஆதியாகமத்திலும் மற்ற இடங்களிலும் தேவனின் பெயர்கள் தேவனைப்பற்றி அதிகதிமாய் பேசுகின்றன. "பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக..." (ஆதியாகமம் 1:26). தேவனுக்கு எபிரெய பதமானது "ஏலோயிம்". இது பன்மையான பெயர்ச்சொல்; 2,700 முறைக்கும் மேலாக பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏவப்பட்ட எழுத்தாளர்கள் தேவனை ஒருமையில் குறிக்கும் "ஏல்" என்கிற வார்த்தையை விட "ஏலோயிம" என்ற வார்த்தையை 10 மடங்கு அளவு உபயோகப்படுத்த தெரிந்துக் கொண்டனர் என்பதையே இது குறிக்கிறது. பழைய ஏற்பாட்டு புத்தகமான தானியேல் புத்தகத்தில் கூட பிதா, குமாரன் இருவரும் தனித்தனி நபர்களாக காட்டப்படுவதை நாம் பார்க்கிறோம். "இத்தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்." (தானியேல் 7:13). மனுஷகுமாரனாகிய இயேசு, நீண்ட ஆயுசுள்ளவர் - வெளிப்படையாகவே, பிதாவாகிய தேவனிடம் வருவதை காணமுடிகிறது.

தேவன் ஒருவரே, ஆனால் மூன்று ஒன்றிணைந்த, முழுவதும் தெய்வீகத் தன்மைக் கொண்ட நபர்கள் என்கின்ற கோட்பாடு புதிய ஏற்பாட்டு வசனங்களில் இங்கும் அங்குமாக பதிவிடப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல், மூன்று தெய்வீக நபர்கள் இருந்தார்கள் என எழுதினார், "... உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு: ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு: அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்." (எபேசியர் 4:4-6).

பவுல் அடிக்கடி கர்த்தத்துவத்தின் மூன்று தனித்தனி நபர்களை சுட்டிக்காட்டுகிறார். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக..." (2 கொரிந்தியர் 13:14). "நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" (எபிரெயர் 9:14).

கர்த்தத்துவத்தின் மூன்று நபர்களை அறிமுகப்படுத்தி வெளியாகம புத்தகம் ஆரம்பிக்கிறது. "...இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவராலும், அவருடைய

சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற ஏழு ஆவிகளாலும், உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக." (வெளியாகமம் 1:4-6).

அதோடு கூட இயேசு ஞானஸ்நானம் பெற்றவேளையில் மூன்று தனித்தனி நபர்களை நாம் நன்றாக பார்க்க முடிகிறது. "இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது: தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது." (மத்தேயு 3:16, 17)

கர்த்தத்துவத்தில் இயேசு மட்டுமே தனிநபராக இருப்பாரென்றால், "இவர் என்னுடைய நேசக்குமாரன்" என்கின்ற சத்தம் எங்கிருந்து வந்தது? அவர் தம்மைத்தாமே மூன்று பிரிவாக பிரித்துக்கொண்டு, வானத்திலிருந்து வந்த குரலாகவும், புறாவைப்போல வானத்திலிருந்து

இறங்கியவராகவும், ஆற்றங்கரையில் நிற்கும் உடலாகவும் காணப்பட்டாரா? இல்லை. இது ஒரு புத்திசாலித்தனமான தெய்வீக புகை மூட்டமோ, பிரதிபிம்பமோ அல்ல, ஆனால் திரித்துவத்தின் சத்தியத்தை விளக்குவதற்காக பிரமாண்டமாக நடத்தப்பட்ட மறுசேர்க்கை ஆகும். இதற்கு மேலாக, இந்த மூன்று நபர்களின் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்தின் வாயிலாக நாம் ஞானஸ்நானம் கொடுக்க நியமிக்கப்பட்டிருக்கிறோம். “ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,” (மத்தேயு 28:19).

# 8 ஒருமைப்பாடா அல்லது அளவிடுதலா?

“ஒன்று” என்கின்ற வார்த்தையினால் ஏற்படும் ஒரு சாதாரண தவறான புரிதலில் இருந்துதான் கர்த்தத்துவம் என்பது சில நபர்களின் கூட்டு என்பதைப்பற்றி குழப்பம் பெரும்பாலும் ஏற்படுகிறது. “ஒன்று” என்று வேதாகமத்தில் வருவது எப்பொழுதும் எண்ணிக்கை என பொருள்படாது. வசனத்தைப் பொறுத்து “ஒன்று” என்பது பெரும்பாலும் ஒருமைப்பாட்டைக் குறிக்கும்.

இந்தக் கோட்பாடு ஆரம்ப கால வசனங்களில் ஏற்படுத்தப்பட்டிருப்பதை நாம்

காண்கிறோம். “இதனிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.” (ஆதியாகமம் 2:24). “இங்கு “ஒரே மாம்சம்“ என்பது திருமணமான ஜோடிகள், திருமணத்திற்குப் பிறகு அவர்கள் ஒன்றாக கரைந்து ஒரு மனிதனாக மாறுவார்கள் என்று பொருள்படாது, ஆனால் அவர்கள் ஒன்றிணைந்து ஒரு குடும்பமாகிறார்கள். அப்போஸ்தலர்கள் ஒன்றாயிருக்க வேண்டுமென இயேசு ஜெபித்தார், “ நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.” (யோவான் 17:22, 23).

இஸ்ரவேலைச் சுற்றிலும் பல மதத்தைச் சார்ந்த நாடுகள் இருந்தபடியால்தான், மோசே “கர்த்தர் ஒருவரே” என்று சொன்னார் என்பதை நாம் மனதில் வைக்க வேண்டும். அவர்கள் தங்களுக்குள் அவ்வப்போது சண்டை சச்சரவுக்குள் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடவுள்களை வணங்கி கொண்டிருந்தார்கள் (உபாகமம் 6:4), அனால் சிருஷ்டித்த தேவன் மூன்று தனித்தனி நபர்களாக ஒன்றினைந்து தாம் படைத்த சிருஷ்டிகளை

இரட்சிப்பதிலும், காப்பதிலும் கருத்தாயிருந்தார்கள். ஆவியானவர், பிதா மற்றும் குமாரனுடைய சித்தத்தை செயல்படுத்தினார் என்றாலும் அது அவருடைய சித்தமும் கூட.

"பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர்: பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்." (1 யோவான் 5:7). ஒரே தேவன் என்பதை புரிந்து கொள்வது மூளைக்கு கொடுக்கப்படும் ஒரு பயிற்சி என்று எடுத்துக் கொண்டால், ஒரு தேவன் ("அவர்") என்பதும் "அவர்கள்" என்பதும் சமமாயிருக்கிறது. ஒரு கயிறு முப்பிரி நூலால் நெய்யப்பட்டிருப்பது போல மூன்று நபர்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்பவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு தேவனாகிறார்கள்.

# 9 இயற்கையில் தேவன் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார்

இந்த உலகத்தில் நேரடியாக தேவனைப்பற்றி வெளிப்படுத்த ஒன்றுமில்லையென்றாலும், பவுல் அறிவிப்பது, " உலகமுண்டானதுமுதற்கொண்டு, காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, தெளிவாய்க் காணப்படும்..." (ரோமர் 1:20). தேவன் மூன்று ஒன்றிணைந்த நபர்களைக் கொண்டவர் என்கின்ற சத்தியம், கண்களால் பார்க்க முடியாத இரண்டு

நபர்கள் (பிதா, பரிசுத்த ஆவி) மற்றும் பார்க்க கூடிய ஒரு நபர் (இயேசு) என்பதை சிருஷ்டிப்பில் காண முடிகிறது.

பிரபஞ்சம் மூன்று அமைப்புகளைக் கொண்டது: வெளியிடம், பொருள் மற்றும் நேரம். இந்த மூன்றில் பொருள் மட்டுமே பார்க்கக் கூடியது. வெளியிடத்துக்கு நீளம், உயரம் மற்றும் அகலம் ஆகியவை இருந்தால் தான் அது வெளியிடமாயிருக்கும். ஒவ்வொரு பரிமானமும் அதனுடைய தனித்தன்மையில் வெவ்வேறாக இருந்தாலும், இந்த மூன்றும் வெளியிடமாகிறது. உயரத்தை நீக்கிவிட்டால் அங்கே வெளியிடம் இல்லை. நேரமும் கூட கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் என்பவைகளின் கூட்டாகிய முவொருமையாக இருக்கிறது. இரண்டை பார்க்க முடியாது (கடந்த காலம், எதிர்காலம்) மற்றும் ஒன்று பார்க்க கூடியது (நிகழ்காலம்). ஒவ்வொன்றும் தனித்தனியாக தனித்தன்மை வாய்ந்தது; அப்பொழுதுதான் நேரம் என்று ஒன்று இருக்க முடியும். உடல் கூறு, மனம், ஆன்மீகம் ஆகிய பாகங்களைக் கொண்ட முவொருமை பெற்றவன் தான் மனிதனும், மறுபடியும், இரண்டு பாகங்கள் வெளியில் தெரியாது (மனம் மற்றும் ஆன்மீகம்) மற்றும் ஒரு பாகம் தெரியக் கூடியது (உடல்). உயிருள்ள உயிரினங்களை அடிப்படையாக வைத்து ஒரே அமைப்பை பெற்றுள்ளதுதான் உயிரணுக்கள். எல்லா உயிரின வாழ்க்கையும் மூன்று அடிப்படை பாகங்களைக் கொண்ட உயிரணுக்களால்

உருவாக்கப்பட்டது: வெளிப்புறச் சுவர், உயர் ஆதாரப்பொருள், கரு (ஒரு முட்டையில் இருக்கும் ஓடு, வெள்ளைக்கரு மற்றும் மஞ்சள் கரு போல). ஏதாவது ஒன்று எடுக்கப்பட்டால் உயிரணுவும் இறக்கிறது.

இந்த ஒவ்வொரு உதாரணத்திலும், ஏதாவது ஒரு பாகம் எடுக்கப்பட்டால் அதனால் மொத்தமும் மறைந்து விடுகிறது. அதே போல தான் தேவத்துவம் என்பது மூன்று தனித்தன்மை வாய்ந்த நபர்களால் ஆனது: பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி, ஒவ்வொருவரும் தேவனே (எபேசியர் 4:6, தீத்து 2:13, அப்போஸ்தலர் 5:3, 4), இருப்பினும் தேவன் ஒருவரே. ஒருவரை நீக்கிவிட்டால், அது மொத்தத்தின் ஒருமைப் பாட்டை அழிக்கிறது.

சுவிசேஷ செய்திகூட மூவரின் ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் பற்றி விளக்குகிறது. ஆசரிப்பு கூடாரம் மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது: பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மற்றும் மகா பரிசுத்த ஸ்தலம். மூன்று கட்ட இரட்சிப்பு இருக்கிறது. நியாயப்படுத்துதல், பரிசுத்தமாகுதல், மகிமைப்படுத்துதல், ஏசாயா 6:3-ல் தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக தேவதூதர்கள், "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என மூன்று முறைக்கூப்பிட்டுச் சொன்னார்கள் - ஒரு முறை பிதாவுக்காகவும் ஒருமுறை குமாரனுக்காகவும் மற்றொருமுறை பரிசுத்த ஆவிக்காகவும் சொன்னார்கள்.

# 10 தவறான புரிதலின் மூலக்காரணம்.

இயேசுவை "குறைவான தேவன்" என்று காட்டி திரித்துவத்தை நிராகரிக்க உபயோகப்படுத்தும் பெரும்பாலான வசனங்கள், கிறிஸ்துவின் மனித பிறவியைப் பற்றிய அடிப்படை புரிதல் இல்லாததே காரணம். தேவ குமாரனாகிய இயேசு பூமிக்கு வந்த போது அவருடைய முழு அளவிலான தெய்வீகத்தை அகற்றிவிட்டு அல்லது தள்ளிவைத்துவிட்டு வந்தார். அப்படி இல்லை என்றால் மனிதர் மத்தியில் தேவனாக அவர் எப்படி வாழ்ந்திருக்க முடியும்?

"...தேவனே... தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப்போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்." (ரோமர் 8:3).

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே: அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே." (2 கொரிந்தியர் 8:9).

"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது: அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின்

ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.” (பிலிப்பியர் 2:5-8).

இயேசு தம்முடைய மனித பிறவியை எடுத்ததற்கு முன்பும் பின்பும் தம்முடைய தெய்வீக மகிமையை வெளிக் கொணர்வதை நாம் தெளிவாகக் காண்கிறோம். “ பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்” (யோவான் 17:5). “என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடி சூட்டப்பட்டதைக் காண்கிறோம்” (எபிரெயர் 2:9)

குமாரனாகிய தேவன் தம்முடைய மகிமையை, பூமிக்கு வந்த போது மறைத்திராதிருந்தால் மனிதன் அவருடைய எடுத்துக்காட்டை கற்றுக்கொள்ளுதலை விடுங்கள். அவருடைய அதித ஒளிமயமான பிரசன்னத்தையே தாங்கியிருக்க முடியாது.

# 11 யார் யாரை முந்துகிறார்?

பரிசுத்த நிலைமைக் குறித்து சற்றே ஆழமான துணிகர முயற்சியில் இறங்குவோம். கர்த்தத்துவத்தின் மர்மங்களைப்பற்றி எடுத்துக் கொள்வோமெனில், திரித்துவத்தின் மூன்று நபர்களில் ஏதோ அதிகார ஏற்ற இறக்க வரிசை காணப்படுவது போல நமக்கு தெரிகிறது. மூன்று நபர்களும் அதே குணத்தையும் பண்புகளையும் பெற்று வல்லமையிலும் மகிமையிலும் சமமாயிருக்கிறார்கள், என்றாலும் பிதாவே இறுதியான அதிகாரத்தை உடையவர் என்பது போல காட்டப்படுகிறது என்பதை மனதில் கொள்ள வேண்டும். "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்: கிறிஸ்து தேவனுடையவர்." (1 கொரிந்தியர் 3:23). "... கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்." (1 கொரிந்தியர் 11:3). குமாரன் தன்னுடைய மகிமை, வல்லமை, சிங்காசனம் மற்றும் நியாயதீர்ப்பு செய்யும் அதிகாரம் அனைத்தையும் தேவனிடமிருந்து தொடர்ந்து பெறுகிறார். (யோவான் 3:35 யோவான் 5:22). நிச்சயமாகவே பிதாவாகிய தேவனே குமாரனைக் கொடுத்தார். உண்மையில், இது தவறாயில்லாதபட்சத்தில், நாம் இயேசுவை நோக்கி ஜெபம் செய்யும்படி ஒரு போதும் சொல்லப்படவில்லை. மாறாக பிதாவிடம் குமாரனின் நாமத்தினாலே ஜெபிக்க வேண்டும். இன்னமும், பிதாவானவர் மேலான அதிகாரம் கொண்டவர் போல

தோன்றினாலும், அது இயேசு மற்றும் பரிசுத்த ஆவி என்பவர்களின் தெய்வீகத்தன்மை குறைந்து போனது போலாகாது. இப்படி சொல்வது ஒரு இராணுவ உத்தியோகஸ்தர் சிப்பாயை விடவும், காவல் வீரரைக் காட்டிலும் குறைவானவர் என்பது போலிருக்கும்.

கர்த்தத்துவத்திலிருக்கும் மூன்று நபர்களுக்கிடையே யார் உயர்ந்தவர் என்கின்ற சத்தமிடுதலோ, அங்கீகாரத்தை தேடுகின்ற போட்டியோ அல்லது மகிமையை தேடும் போட்டிபோ இருப்பதை நாம் காணமுடியாது. அதற்கு பதில் நேர் எதிர்மறையான நிலையே சரியாக இருக்கும். உண்மையில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகியோர் ஒருவருக்கொருவர் எப்போதும் விட்டுக்கொடுத்து, ஒருவரையொருவர் மகிமைப்படுத்துவதற்கு முயற்சிப்பது தெரிகிறது. பிதா குமாரனை மகிமைப்படுத்த விரும்புகிறார். குமாரன் பிதாவை மகிமைப்படுத்தி ஜீவிக்கிறார், மற்றும் பரிசுத்த ஆவி பிதாவையும், குமாரனையும் மகிமைப்படுத்தி ஜீவிக்கிறார். (யோவான் 17:1, 5; யோவான் 16:14; யோவான் 13:31, 32).

# 12 நண்பரா அல்லது சக்தியா?

இந்த உயர்வான தலைப்பாகிய திரித்துவம் பற்றிய தெளிவற்ற வேறு ஒரு போதனையைக் குறித்து குறிப்பிடாமல் போவது தவறானதாகும். பிதாவும் குமாரனும் உண்மையில் தனித்தன்மை

வாய்ந்த நபர்கள் எனவும் அவர்கள் பரிசுத்த ஆவியை ஒரு பிரபஞ்சம் சம்பந்தமான ஒரு வலிமையாக அல்லது கருப்பொருளாக, பிதா குமாரனின் ஏவல்களை செய்வதற்கான ஒரு வழித்தடமாக அல்லது வாகனமாக இருக்கும் அருவமான ஒரு வல்லமையாக இருக்கிறார் எனவும் வேறு ஒரு உண்மையான கிறிஸ்தவக்குழு நம்புகிறது.

கர்த்தத்துவத்தில் பரிசுத்த ஆவி மட்டும் மனதில் நினைத்து பார்ப்பதற்கும், வரையறை செய்வதற்கும் கடினமான ஒருவராக இருப்பது போல தோன்றுவது ஏன் என நாம் எண்ணலாம். சில வேளைகளில் அவரை பரிசுத்த ஆவி என சொல்லும்போது மக்களுக்கு அது ஒருவித “பயமுறுத்தும் ஆவி“ போல நினைக்கத் தோன்றுகிறது. வேத வாக்கியங்கள் அவரை, காற்றுக்கும், நெருப்புக்கும் ஒப்பிட்டு பேசுகிறது மற்றும் புறாவைப் போலவும், தண்ணீரைப் போலவும் மற்றும் பாதுகாக்கும் பாது காவலராகவும் இருப்பதாகக் காட்டுகிறது.

பரிசுத்த ஆவியின் பலவிதமான அம்சங்களை கணக்கிலெடுக்கும் போது, அவர், தனிப்பட்ட மற்றும் தனித்தன்மை வாய்ந்த, அறிவுள்ள, ஒரு தனி நபராக இருப்பதற்கான நற்சான்றுகளை நாம் உடனே பார்க்க முடிகிறது.

பரிசுத்த ஆவியானவர் முன்நின்று வழி நடத்துகிறார். “சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்.”(யோவான் 16:13). ஒரு வரைபடமோ அல்லது வழிகாட்டும் கருவியோ

(GPS) உங்களை வழி நடத்துவது உண்மைதான், ஆனால் வரைப்படத்தை யாரும் “அவர்” என்று அழைப்பதில்லை. “அது வரும் போது” என்று சொல்லுவதற்கு இயேசுவுக்கு இன்னமும் சுலபமாயிருந்திருக்கும், ஆனால் இயேசு பரிசுத்த ஆவியை “அவர்” என்று 15 முறைக்கும் அதிகமாக கூறியிருக்கிறார். தம்முடைய உள்ளார்ந்த வல்லமையை உருவகப்படுத்தி அது உணர்ச்சிகள், நினைவுகள், பேச்சு போன்றவைகளைப் பெற்று ஒரு தனி நபராக இருக்கிறார் என்று சொல்லும் அளவுக்கு தேவன் ஏன் இவ்வளவு சிரமத்தை எடுக்க வேண்டும்?

பரிசுத்த ஆவியானவர் ஆறுதலளிக்கிறார். “நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.” (யோவான் 14:16). தனியாக இருக்கும் ஒரு குழந்தை தூசு உறிஞ்சும் கருவியை கட்டிப்பிடிக்க ஓடுவதை நான் ஒருபோதும் பார்த்ததில்லை - அறிவுள்ளவர்கள் மட்டுமே ஆறுதலளிக்க முன்வருவர். இயேசு பரமேறிப் போகும் முன்பதாக வேறொரு தேற்றரவாளனை அனுப்புவதாக வாக்களித்தார்; கிரேக்க மொழியில் பாரக்லிட் என்று சொல்லப்படும் அந்த வார்த்தை, ஆலோசகராக, ஆறுதலளிப்பவராக, பரிந்துரைக்கிறவராக, உதவி செய்பவராக, தேற்றுபவராக, நண்பராக மற்றும் ஆதரவாளராக பன்முகப்படுத்தப்பட்ட தனி ஊழியத்தை குறிக்கிறது. (யோவான் 14:16, 17, 26;

15:26, 27; 16:7-15). இவையெல்லாம் ஒரு நபருக்கோ அல்லது நண்பருக்கோ சாதாரணமாக இருக்கக் கூடிய பண்புகள். பரிசுத்த ஆவி தேவனின் வெறும் செயலில் ஈடுபடும் உந்து சக்தி மட்டுமே என்றால், யோவான் 16:7, 8 வசனங்கள் அர்த்தமற்றதாகிவிடும். “நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்: நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்: நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்: நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்”. இந்த வசனத்தின் மூலம் இயேசு பரமேறினப் பிறகு பரிசுத்த ஆவியானவர் தாமே பிரசன்னமாவார் என்பது வெளிப்படையாகிறது. பரிசுத்த ஆவி வெறும் சக்திதான் என்றால், இயேசு சென்றாலொழிய அவர் வரமாட்டார் என்று சொல்வதில் எந்த விளக்கமும் அர்த்தமும் இல்லை.

பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தவும் முடியும் (எபேசியர் 4:30). கார்களும் அநேக குணாதிசயங்களும் உள்ளான சிக்கல்களும் பெற்றிருக்கின்றன. சில வேளைகளில், அவைகளும் ”ஆளுமைத்தன்மை” பெற்றிருப்பது போல காணலாம். ஆனால் உந்து வாகனங்களை துக்கப்படுத்த முடியாது. பரிசுத்த ஆவி பேசுவது போல அவைகள் பேசவும் முடியாது. “ஆவியானவர் நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று

பிலிப்புடனே சொன்னார்.” (அப்போஸ்தலர் 8:29). கணினி நிரல்கள் உரையாடலை மறுபடியும் செய்து காட்ட இருக்கின்றன. ஆனால், அவைகளால் உற்சாகப்படுத்தும் சிந்தனைகளை உருவாக்க முடியாது. பரிசுத்த வசனங்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டவை. (2 பேதுரு 1:21)

கிருபைக்காகவும் சமாதானத்துக்காகவும் பிதா, பரிசுத்த ஆவி மற்றும் இயேசு கிறிஸ்துவிடம் ஒரு ஜெபம் ஏறெடுக்கப்படுவதை வெளியாகமம் 1:4, 5 வசனங்களில் நாம் வாசிக்கிறோம். பிதா குமாரன் போல பரிசுத்த ஆவியை ஒரு தெய்வீக அறிவு ஜீவியாக பாவிக்கவில்லையென்றால், நாம் கேட்க வேண்டியது, யோவான் ஆவியானவரை பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையில் வைத்திருப்பாரா?

பரிசுத்த ஆவி வெறுமனே ஒரு தெய்வீக சக்தி என்றால், அவருக்கு எதிரான தூஷணம் ஏன் அவமதிப்பதாக கருதப்படுகிறது மற்றும் குமாரனுக்கு விரோதமாக பேசுவதைக் காட்டிலும் அதிக ஆபத்தானதாக ஏன் எண்ணப்படுகிறது? “ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; எந்தப்பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்: ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்: எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை.” (மத்தேயு 12:31,

32) வரைமுறைப்படுத்துதல் மூலம், தூஷணம் என்பது "தேவனுக்கு விரோதமாக, அவமதிப்பதாக அல்லது தேவநிந்தையாக நடப்பதோ, பேசுவதோ அல்லது எழுதுவதோ" ஆகும். இந்த எளிதான பகுத்தறிதல் மூலம் பரிசுத்த ஆவி தேவனாகவே இருக்கிறார் என்றறிய முடிகிறது! இதனால் தான் பேதுரு, பரிசுத்த ஆவியிடம் பொய் சொல்வது தேவனிடம் பொய் சொல்வதாகும் என கூறுகிறார்.
(அப்போஸ்தலர் 5:3, 4).

பரிசுத்த ஆவியானவர் சாட்சியாயிருக்க முடியும் (எபிரெயர் 10:15). உலகத்தின் எந்த நீதிமன்றத்திலும், உயிருள்ளவர்கள் மட்டுமே சாட்சிகள் என சொல்லப்படுவர். கடைசியாக பரிசுத்த ஆவியானவர் தனக்கென சிந்தை வைத்திருக்கிறார் என சொல்லப்படுகிறது. (ரோமர் 8:27).

பரிசுத்த ஆவியானவர் சாதாரண ஒரு சக்தி அல்ல, ஆனால் அவர் கர்த்தத்துவத்தின் மூன்றாவது தெய்வீக நபர் என்பதை நம்மால் தெளிவாக பார்க்க முடிகிறது. ஆவியானவராக இருந்தாலும் ஒரு தனி நபர் மற்றும் ஆள் தத்துவம் உடையவரின் எல்லா குணலட்சணங்களையும் அவர் பெற்றிருக்கிறார். பேசக்கூடிய, போதிக்கக் கூடிய, வழி நடத்தக்கூடிய, விருப்பத்தேர்வை செய்யக்கூடிய, சாட்சியளிக்கக் கூடிய, ஆறுதலளிக்கக் கூடிய மற்றும் வருத்தப்படுத்தப்படக் கூடிய உயிருள்ள நபராக அவியானவர் படம்பிடித்துக் காட்டப்படுகிறார். "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய

ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக" (2 கொரிந்தியர் 13:14).

# 13 கல்வாரியில் அன்பு

திரியேக தேவனின் சத்தியத்தை சுவிசேஷத்திலும் காண முடிகிறது. சுருக்கமாக, யோவான் சொல்வதை கருத்தில் கொள்ளும் போது, பரிசுத்த ஆவியாகிய தேவன் மூலமாய் நாம் மறுபடியும் பிறப்பதற்காக குமாரனாகிய தேவனை அனுப்பி இவ்வளவாய் பிதாவாகிய தேவன் உலகத்தில் அன்பு கூர்ந்தார் என நாம் வாசிக்கிறோம். (யோவான் 3:8, 13, 16, 17).

ஆனால், முக்கியமாக, கொல்கதா மலையில்தான் திரித்துவத்தின் கொள்கை சபைப் பிரிவுகளின் கொள்கைகளைக் காட்டிலும் அர்த்தமுள்ளதாக எடுத்துக்காட்டப்படுகிறது. பூமியின் சிருஷ்டிப்புக்கு முன்னரே, மனிதனுடைய எதிர்ப்புத் தன்மையையும் விழுகையையும் பற்றி திரியேக தேவன் கலந்தாலோசித்தார்கள். பாவக்கேடு உலகத்தில் எப்படிப்பட்ட தாக்கத்தை உருவாக்கும் என்கின்ற பயங்கரத்தை தேவன் தாமே தெய்வீக முன்னறிவின் கண்ணாடிவில்லை வழியாகப் பார்த்தார். அப்பொழுதே மனிதன் உருவாக்கப்படுமுன், மனித குலத்துக்கு பதிலாளியாக இயேசு பரலோகத்தின் தெய்வீக ஆசனத்தை விட்டிறங்கவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. இயேசு "உலகத்தோற்றத்திற்கு

முன்பே குறிக்கப்பட்ட பலியான ஆட்டுக்குட்டியாக இருந்தார்." (வெளியாகமம் 13:8, 1 பேதுரு 1:19, 20).

# 14 திரித்துவத்தில் ஓர் பிரிவு

பாவம் சிருஷ்டிகரிடமிருந்து ஒரு பிரிவினையை உண்டாக்குகிறது என்கின்ற இன்னொரு விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். (ஏசாயா 59:2). மனுக்குலத்தின் அக்கிரமங்கள் குமாரனாகிய தேவன் மேல் சுமத்தப்பட்டது. (ஏசாயா 53:6). நம்முடைய பாவங்களுக்காக இயேசு சிலுவையில் தொங்கி துன்பப்பட்டபோது, பிதாவிடமிருந்தும் மற்றும் பரிசுத்த ஆவியிடமிருந்தும் நித்திய உறவு பிரிக்கப்பட்டதினால் அவருடைய உயிரின் ஒவ்வொரு இழையும் பிய்த்து எறியப்பட்டது. வேதனையில் அவர் சத்தமிட்டு கூப்பிட்டார். "என் தேவனே! (பிதாவுக்காக) என் தேவனே! (ஆவிக்காக) ஏன் என்னைக் கைவிட்டீர்?" (மத்தேயு 27:46) கர்த்தத்துவத்தில் ஒரே ஒரு நபர்தான் இருந்திருப்பாரென்றால் இயேசுவின் இதயத்திலிருந்து ஜீவனை பிய்த்தெடுக்கும் இப்படிப்பட்ட மிகவும் துன்பப்படுத்தும் தனிமைப்படுத்துகின்ற வேதனை அங்கே இருந்திருக்க முடியாது.

இரட்சிப்பின் திட்டத்தில் இருந்த உண்மையான ஆபத்து, மனிதனின் இழப்புமட்டுமல்லாமல், கர்த்தத்துவத்தில் ஏற்பட்ட பிரிவும் ஆகும். இயேசு பாவம் செய்திருப்பாரேயானால், ஆவியுடன் மற்றும் தன்னுடைய பிதாவுடன் எதிர்மறையான

காரணங்களுக்காக பணிப்புரிந்திருப்பார். சர்வ வல்லமையான நன்மை, சர்வ வல்லமையுள்ள தீமைக்கு எதிராக தோற்றுப்போயிருக்கும். மற்ற சிருஷ்டிப்புக்கெல்லாம் என்ன நடந்திருக்கும்? விழுந்து போகாத பிரபஞ்சத்தினர் யாரை சரியானவர் என்று பார்த்திருப்பர்? ஒரு பாவம், தேவத்துவத்தையும், அண்டத்தையும் பெரும் பிரபஞ்ச குழப்பத்திற்குள் பிண்ணி பிணைந்திருக்கும்; இந்த அழிவின் அளவு தடுமாற்றம் தரக்கூடியதாய் இருக்கிறது. ஆனாலும், மனிதனுடைய இரட்சிப்புக்காக இந்த மாபெரும் ஆபத்தையும் சந்திக்க கர்த்தத்துவம் சித்தம் கொண்டிருந்தார். இது தேவனுடைய ஆச்சரியமான அன்பின் ஆழத்தை எடுத்துக்காட்டுகிறது.

# 15 முடிவுரை

மாபெரும் தேவ மனிதனாகிய அகஸ்டின், ஒருமுறை திரித்துவம் பற்றிய கோட்பாட்டைக் குறித்து அதிகமாக குழம்பியவராக சமுத்திரக் கரையோரமாக நடந்துக் கொண்டிருந்தார். அவர் தியானித்துக் கொண்டிருக்கும் வேளையில், ஒரு சிறுவன் தண்ணீரண்டைக்கு முன்னும் பின்னுமாக ஓடி கையிலிருந்த சிப்பியில் தண்ணீரை மொண்டு வந்து மணலிலிருந்த நண்டு வளையில் ஊற்றுகிறதை கவனித்தார். அவனைப்பார்த்து “தம்பி, நீ என்ன செய்துக் கொண்டிருக்கிறாய்?” என அகஸ்டின் கேட்டார்.

"ஓ! சமுத்திரத்தில் இருக்கின்ற எல்லா நீரையும் இந்த வளையில் ஊற்ற பிரயாசம் எடுத்துக் கொண்டிருக்கிறேன்" என்று சிறுவன் பதிலளித்தான்,. அகஸ்டின் தன்னுடைய பாடத்தை படித்துக்கொண்டார்.

அங்கிருந்து நகர்ந்து சென்ற அகஸ்டின் சொன்னது, "இப்படிப்பட்ட காரியத்தை தான் நானும் முயற்சித்திருக்கிறேன் என்பதை நான் காண்கிறேன். காலம் என்னும் கரையில் நின்று கொண்டு, அநித்தியமான சிறிய மனதிற்குள் நித்தியமாவைகளை நிரப்ப முயன்று கொண்டிருக்கிறேன். " அதேபோல, மனநிறைவுடன் நாம் இன்னமும் அறிந்துக் கொள்ளாத விஷயங்களை தேவனிடம் சமர்ப்பிப்போம்.

தேவனைப்பற்றி நாம் எல்லாவற்றையும் புரிந்து கொண்டிருக்கிறோம் என்பது போல பாவிப்பது பெருதளமான விபரீதமான ஒன்றாயிருக்கும். "ஆ!, தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!" (ரோமர் 11:33). ஏதோ மரபணு குறியீட்டை நீக்குவது போல அவரை நாம் முழுமையாக பிரித்தெடுக்க முடியுமென்றால், அவர் தேவனாயிருக்கமாட்டார்.

இருந்தாலும், நம்முடைய ஆசீர்வாதத்துக்காக தேவனைப்பற்றி நிறையவே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "மறைவானவைகள்

நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள், வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்." (உபாகமம் 29:29). திரித்துவம் பற்றி என்ன வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்த போதனை தான் தேவனுக்கு முக்கியமானது. இயேசுவின் ஊழியம் ஆரம்பத்திலும், முடிவிலும், தேவத்துவத்தில் மூன்று நபர்கள் இருக்கிறார்கள் என்பதை வலியுறுத்துகிறது. இயேசுவின் ஞானஸ்நான வேளையிலும், அவருடைய பரமேறுகிற சமயத்திலும், பிதா, குமாரன் மற்றும் ஆவியானவரின் பிரசன்னம் இருந்தது. இயேசு தம்முடைய சீஷர்களை பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்க கட்டளையிட்டார்.

வேத வசனங்களின் இந்த சாட்சியானது, கர்த்தத்துவத்தை மூன்று தேவர்களாக தனித்து பிரிக்கவோ அல்லது ஒரே நபராக ஒன்றிணைந்து காட்டவோ முடியாது என்பதை காட்டுகிறது. இந்த மூவரில் ஒருவர் நம்மை சிருஷ்டித்தது மட்டுமல்லாமல் அவர்கள் நம்மீது அன்பு செலுத்துகிறார்கள், மற்றும் இழந்துபோன ஒரு உலகை பாவத்திலிருந்து மீட்டெடுத்து நாம் பரலோகத்தில் தேவ சந்நிதானத்தில் மறுபடியும் காணப்பட ஒரு ஆச்சரியமான திட்டத்தை வகுத்தார். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய

ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.” (2 கொரிந்தியர் 13:14)

*******

AMAZING FACTS India

# அமேசிங் ஃபேக்ட்ஸ் வேதாகமப் பாடங்கள் மூலம் உங்கள் தேடுதலைத் தொடருங்கள்!

மனதைக் கவரும், ஊக்கமூட்டும் இந்தத் தொடர் சத்தியங்கள் உங்கள் எதிர்காலத்தை தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொள்ள உதவும்.

எங்களை தொடர்பு கொள்ள

**BibleStudy.AFTV.in**

என்ற இணையதளத்தில் இன்றே எங்களை சந்திக்கவும்.

AMAZING FACTS

India

தேவனுடைய செய்தியே எங்களுடைய ஊழியம்




**BOOKSTORE.AFTV.INற்கு வருகைத் தரவும்.**

இங்கே நீங்கள் கிறிஸ்தவப் புத்தகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் புக்மார்க்குகள் என பல பயனுள்ள பொருட்களை வெவ்வேறு மொழிகளில் வாங்கலாம்.

உங்கள் வீட்டிற்கே டெலிவரி செய்யப்படும்!

இன்னும் அதிகமான **இலவச**

**டிஜிட்டல் பத்திரிக்கைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள்.**




**AFTV.in/Free-Book-Library**

ஆங்கிலம், ஹிந்தி, தெலுகு என பல மொழிகளில் கிடைக்கிறது!

Amazing Facts India
Post Box No. 51 • Banjara Hills
Hyderabad, TS 500034

www.AmazingFactsIndia.org